புதுச்சேரி அரசு

துணைநிலை ஆளுநர் செயலகம்

***No. LGS/PRO/2021*** ***03 மே, 2021***

<u>பத்திரிகை செய்தி</u>

புதுச்சேரியில், 15 ஆவது சட்டப்பேரவைக்கான தேர்தல் முடிவுகள் நேற்று அறிவிக்கப்பட்டன. அதில் அகில இந்திய என். ஆர். காங்கிரஸ் மற்றும் பி. ஜே. பி கூட்டணி 16 இடங்களில் வெற்றி பெற்றது.

வெற்றி பெற்ற 16 சட்டமன்ற உறுப்பினர்களும் கையொப்பமிட்டு, என். ஆர். காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு ரங்கசாமி அவர்களின் தலைமையில் ஆட்சி அமைப்பதற்கான உரிமை கோரி மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் அவர்களை இன்று(03-05-2021) துணைநிலை ஆளுநர் மாளிகையில் நேரில் சந்தித்து கடிதம் கொடுத்தனர். அதனைப் பெற்றுக் கொண்ட துணைநிலை ஆளுநர். மத்திய அரசின் ஒப்புதலோடு அவர்கள் குறிப்பிடும் நாளில் பதவிப் பிரமானம் செய்து வைக்கப்படும் என்று தெரிவித்தார்.

துணைநிலை ஆளுநரின் ஆலோசகர்கள் டாக்டர் C. சந்திரமௌலி மற்றும் டாக்டர் A. P மகேஸ்வரி ஆகியோர் உடனிருந்தனர்.